# டிசம்பர் – 30 – கிறிஸ்து பிறப்பு வார ஞாயிறு

## திருக்குடும்பம்

**"நான் என் தந்தையின் அலுவல்களில் ஈடுபட்டிருக்கவேண்டும் என்பதுஉங்களுக்குத் தெரியாதா?"*லூக். 2:49***

-----------------------------------------------------------------

**முதல் வாசகம் : 1 சாமுவேல் 1:20 – 22, 24 – 28**

உரிய காலத்தில் அன்னா கருவுற்று ஒரு மகனைப் பெற்றெடுத்தார், "நான் அவனை ஆண்டவரிடமிருந்து கேட்டேன்" என்று சொல்லி, அவர் அவனுக்குச் "சாமுவேல்" என்று பெயரிட்டார். எல்கானாவும் அவர் வீட்டார் அனைவரும் ஆண்டவருக்குத் தங்கள் ஆண்டுப் பலியையும் பொருத்தனை யையும் செலுத்தச் சென்றார்கள், ஆனால், அன்னா செல்லவில்லை, அவர் தம் கணவரிடம், "பையன் பால் குடி மறந்ததும் அவனை எடுத்துச் செல்வேன், அவன் ஆண்டவர் திருமுன் சென்று என்றும் அங்கே தங்கியிருப்பான்" என்று சொன்னார். அவன் பால்குடி மறந்ததும், அன்னா அவனைத் தூக்கிக் கொண்டு மூன்று காளை, இருபது படி அளவுள்ள ஒரு மரக்கால் மாவு, ஒரு தோல்பை திராட்சை இரசம் ஆகியவற்றுடன் சீலோவிலிருந்து ஆண்டவரின் இல்லத்திற்கு வந்தார், அவன் இன்னும் சிறு பையனாகவே இருந்தான். அவர்கள் காளையைப் பலியிட்ட பின், பையனை ஏலியிடம் கொண்டு வந்தார்கள், பின் அவர் கூறியது : "என் தலைவரே! உம் மீது ஆணை! என் தலைவரே! உம்முன் நின்று ஆண்டவரிடம் வேண்டிக் கொண்டிருந்த பெண் நானே. இப்பையனுக்காகவே நான் வேண்டிக்கொண்டேன், நான் ஆண்டவரிடம் விண்ணப்பித்த என் வேண்டுகோளை அவர் கேட்டருளினார், ஆகவே நான் அவனை ஆண்டவருக்கு அர்ப்பணிக்கிறேன், அவன் தன் வாழ்நாள் அனைத்தும் ஆண்டவருக்கே அர்ப்பணிக்கப்பட்டவன், அங்கே அவர்கள் ஆண்டவரைத் தொழுதார்கள்

**பதில்பாடல் :** ஆண்டவரே உமது இல்லத்தில் தங்கியிருப்போர் பேறு பெற்றோர்.

**இரண்டாம் வாசகம் : 1யோவான் 3:1 – 2,21- 24**

என் அன்பார்ந்தவர்களே, நம் தந்தை நம்மிடம் எத்துணை அன்பு கொண்டுள்ளார் என்று பாருங்கள். நாம் கடவுளின் மக்களென அழைக்கப்படுகிறோம் கடவுளின் மக்களாகவே இருக்கிறோம். உலகம் அவரை அறிந்துகொள்ளாததால்தான் நம்மையும் அறிந்து கொள்ளவில்லை. என் அன்பார்ந்தவர்களே, இப்போது நாம் கடவுளின் பிள்ளைகளாய் இருக்கிறோம். இனி எத்தன்மையராய் இருப்போம் என்பது இன்னும் வெளிப்படவில்லை. ஆனால் அவர் தோன்றும்போது நாமும் அவரைப்போல் இருப்போம் ஏனெனில் அவர் இருப்பதுபோல் அவரைக் காண்போம். அன்பார்ந்தவர்களே, நம் மனச்சான்று நாம் குற்றவாளிகள் எனத் தீர்ப்பளிக்காதிருந்தால் நாம் கடவுள் திருமுன் உறுதியான நம்பிக்கை கொண்டிருக்க முடியும். அவரிடம் நாம் எதைக் கேட்டாலும் பெற்றுக் கொள்வோம் ஏனெனில் அவர் கட்டளைகளைக் கடைப் பிடிக்கிறோம் அவர் திருமுன் அவருக்கு உகந்தவற்றையே செய்து வருகிறோம். கடவுள் நமக்குக் கொடுத்த கட்டளைப்படி, அவருடைய மகன் இயேசு கிறிஸ்துவிடம் நம்பிக்கை கொண்டு, ஒருவர் மற்றவரிடம் அன்பு செலுத்த வேண்டும். இதுவே அவரது கட்டளை. கடவுளுடைய கட்டளைகளைக் கடைப்பிடிப்பவர் அவரோடு இணைந்திருக்கிறார் கடவுளும் அவரோடு இணைந்திருக்கிறார். கடவுள் நம்மோடு இணைந்திருக்கிறார் என்பதை அவர் நமக்கு அருளிய தூய ஆவியால் அறிந்து கொள்கிறோம்.

**நற்செய்தி : லூக்கா 2 : 41 - 52**

ஆண்டுதோறும் இயேசுவின் பெற்றோர் பாஸ்கா விழாவைக் கொண்டாட எருசலேமுக்குப் போவார்கள். இயேசுவுக்குப் பன்னிரண்டு வயது ஆனபோது, வழக்கப்படி விழாவைக் கொண்டாட எருசலேம் சென்றனர். விழா நாள்கள் முடிந்து அவர்கள் திரும்பியபோது, சிறுவன் இயேசு எருசலேமில் தங்கிவிட்டார். இது அவருடைய பெற்றோருக்குத் தெரியாது. பயணிகள் கூட்டத்தில் அவர் இருப்பார் என்று எண்ணினர். ஒருநாள் பயணம் முடிந்தபின்பு உறவினரிடையேயும் அறிமுக மானவர்களிடையேயும் அவரைத் தேடினர். அவரைக் காணாததால் அவரைத் தேடிக்கொண்டு எருசலேமுக்குத் திரும்பிச் சென்றார்கள். மூன்று நாள்களுக்குப்பின் அவரைக் கோவிலில் கண்டார்கள். அங்கே அவர் போதகர்கள் நடுவில் அமர்ந்து அவர்கள் சொல்வதைக் கேட்டுக் கொண்டும் அவர்களிடம் கேள்விகளை எழுப்பிக் கொண்டுமிருந்தார். அவற்றைக் கேட்ட அனைவரும் அவருடைய புரிந்து கொள்ளும் திறனையும் அவர் அளித்த பதில்களையும் கண்டு மலைத்துப் போயினர். அவருடைய பெற்றோரும் அவரைக் கண்டு வியப்பில் ஆழ்ந்தனர். அப்பொழுது அவருடைய தாய் அவரை நோக்கி, "மகனே, ஏன் இப்படிச் செய்தாய்? இதோ பார், உன் தந்தையும் நானும் உன்னை மிகுந்த கவலையோடு தேடிக்கொண்டிருந்தோமே" என்றார். அவர் அவர்களிடம் "நீங்கள் ஏன் என்னைத் தேடினீர்கள்? நான் என் தந்தையின் அலுவல்களில் ஈடுபட்டிருக்க வேண்டும் என்பது உங்களுக்குத் தெரியாதா?" என்றார். அவர் சொன்னதை அவர்கள் புரிந்து கொள்ளவில்லை. பின்பு அவர் அவர்களுடன் சென்று நாசரேத்தை அடைந்து அவர்களுக்குப் பணிந்து நடந்தார். அவருடைய தாய் இந்நிகழ்ச்சிகளையெல்லாம் தமது உள்ளத்தில் பதித்து வைத்திருந்தார். இயேசு ஞானத்திலும் உடல்வளர்ச்சி யிலும் மிகுந்து கடவுளுக்கும் மனிதருக்கும் உகந்தவராய் வாழ்ந்து வந்தார்.

**தியானம் :** குடும்பம் என்பது ஒரு குட்டித் திருச்சபை. இக் குட்டித் திருச்சபைகள்தாம், இன்று உலகளாவியரீதியில் பரந்து, வரிந்து பாரியவிருட்சமாகக் காட்சியளிக்கும் திருச்சபையின் வேர்கள் எனக் கூறலாம். திருச்சபை என்னும் விருட்சம் தளிர்விடவும், மேலும் பலகிளைகளைப் பரப்பிடவும் இந்தவேர்களின் பங்களிப்பு மிகமிக அவசியமான ஒன்றானதாகும். இக்குடும்பவேர்கள் பல ஒன்றிணைந்து செயற்படாவிடின் திருச்சபை என்னும் விருட்சத்தின் வளர்ச்சி குன்றி விடுவது மட்டுமன்றி, பலகிளைகள் செயலற்றுப் போவதும் தவிர்க்க முடியாததாகி விடுகின்றது. இவற்றையே நாம் இன்று வாழும் புலம்பெயர் நாடுகளில் கண்கூடாகக் காண்கிண்றோம். இன்றைய நவீன உலகச் சிந்தனைகள் நாகரீகம், பொருளாதாரம் போன்ற பலகாரணிகளை முன்னிலைப்படுத்தியே நம்மை வாழத் தூண்டுகின்றன. இத்தகைய வாழ்க்கைச் சூழலில் இன்று குடும்பங்கள் பலசிதைந்து சின்னாபின்னமாகிக் கொண்டிருப்பதை நாம் காண்கின்றோம். குடும்பம் என்ற அளவிடற்கரிய செல்வத்தின் வரைவிலக்கணமே இன்று மாற்றியமைக்கப்பட்டிருக்கின்றது. பாசத்தை பணம் விலைக்கு வாங்கிவிட்டதோ? அன்பு அடைவ வைக்கப்பட்டுவிட்டதோ எனஎண்ணத் தோன்றுகின்றது.இன்றைய இறைவார்த்தைகள் குடும்மங்களின் நல்ல பல விழுமியங்களை நமக்கு நினைவுபடுத்தி, நம்மைப் படைத்த இறைவனுக்கு நன்றியுள்ள குடும்பங்களாகவும், அவருக்கு ஏற்றவகையில் நம் வாழ்க்கைப் பாதையைமாற்றியமைக்கவும் அழைப்புவிடுக்கின்றன. நமது குழந்தைச் செல்வங்கள் வாழ்க்கையில் முன்னேற்றம் அடையவேண்டும் என்பதற்காகநாம் எத்துணை சிரத்தை எடுத்து வருகின்றோம். அதேசமயம், அந்தகுழந்தைச் செல்லங்களை நமக்களித்த இறைவனுக்கு ஏற்றகாரியங்களில் அவர்களை ஊக்கப்படுத்த நாம் எத்துணை முயற்சிகள் மேற்கொள்ளுகின்றோம்? அவர்களிடையே ஆன்மீகதாகத்தை உண்டுபண்ணி அவர்களும் கடவுளை நாடித்தேட என்ன வழிவகைகள் மேற்கொள்ளுகின்றோம்? இயேசுவின் திருக்குடும்பமும், சாமுவேலின் குடும்பமும் எவ்வாறு கடவுளைத் தம் வாழ்க்கையில் முன்னிலைப்படுத்தி வாழ்ந்தார்கள் என்பதைத் தியானித்துநம் குடும்பங்களையும் அந்தப் பாதையிலே வழிநடத்திச் செல்வோமாக.